செ.வெ.எண்: 09 நாள்: 04.03.2017

# இலுப்பூர் வட்டத்தில் வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு ரூ.36.24 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வருவாய்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை உதவிகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி 14 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.68 இலட்சம் மதிப்பில் உடல் ஊனமுற்றோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 91 பயனாளிகளுக்கு ரூ.10.92 இலட்சம் மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 31 பயனாளிகளுக்கு ரூ.3.72 இலட்சம் மதிப்பில் விதவை உதவித்தொகைக்கான காசோலைகளும், 2 பயனாளிகளுக்கு ரூ.24000 மதிப்பில் முதிர்கன்னி உதவித்தொகைக்கான காசோலைகளும், 6 பயனாளிகளுக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பில் நலிந்தோர் நலத்திட்ட உதவித்தொகைக்கான காசோலைகளும், 4 பயனாளிகளுக்கு ரூ.48000 மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 150 பயனாளிகளுக்கு ரூ.18 இலட்சம் மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளும் என மொத்தம் 298 பயனாளிகளுக்கு ரூ.36.24 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழகஅரசு பொதுமக்களின் நலனை மேம்படுத்தும் வகையில் விலையில்லா வெள்ளாடு, கறவை மாடுகள் வழங்கும் திட்டம், ஏழை பெண்களின் திருமணத்திற்காக தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு போன்ற பல்வேறு மக்கள் நலத்திட்ட பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன் பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**